DIOCESE OF KUMBAKONAM

NEWS - LETTER

(Compiled and Edited by Diocesan News-Letter Committee)

VOL. : 53 JUNE - 2026 No. 6



"சீசருக்கு உரியவற்றை சீசருக்கும்
கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள்"

மாற் - 12:17

Ad Multos Annos



REV. FR. J. JOHN PANNERSELVAM

As a man of erudition and practical wisdom, he has carried out his priestly ministry rendering his service as the Headmaster of the Higher Secondary School at Annamangalam and Kumbakonam. And as a good pastor and Vicar Forane his ministry at Michaelpatti, and as Parish priest at Kabistalam, Thirukavalur and Sukkambar are commendable. As a priest with a greater sense of responsibility and commitment, he has proved to be an example to other priests both in spiritual life and pastoral ministry. On retiring from active pastoral ministry, we appreciate and thank him for all that he had been to our diocese and wish him all the best in the years to come with good health and long life.

REV. FR. A. SANTIAGU



With a deep commitment in his priestly ministry and a life of simplicity, Rev. Fr. A. Santiagu carried out his priestly ministry in different capacities like Procurator, Vicar Forane at Michaelpatti and Parish priest atPudukottai, Ariyalur, Musiri, Purathakudi, Thirukavalur, Kokkudi and Kallakudi. He is known for his hard work and cordial relationship with every one among the priests. He had guided many seminarians by inviting them for summer ministry in parishes. And he has been always a people oriented priest looking for the welfare of people and parish. On retiring from active pastoral ministry, we gratefully appreciate all his service and wish him all the best in his retired life. May God bless him with good health. His practical wisdom will help other priests in the coming years as well.

Most Rev. A. Jeevanandam
Bishop of Kumbakonam

ஆயரின் செய்தி

அதிசயம்

அன்பர்களே, நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் (தவெக), அதன் தலைவர் திரு. C. ஜோசப் விஜய் அவர்களின் தலைமையில் தனது முதல் தேர்தலிலேயே 108 இடங்களில் அமோக வெற்றி பெற்றது. எனினும், ஆட்சி அமைக்க தேவையான 118 இடங்கள் என்ற பெரும்பான்மை கிடைக்காத நிலையில், ஒரு தாய் தன் தலைப்பேறான குழந்தையை ஈன்றெடுக்கும் போது அனுபவிக்கும் சிரமங்களைப் போன்று ஐந்து நாட்கள் பெரும்பான்மைக்காக அரும்பாடுபட்டு, இறுதியில் 10.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று முதன்முறையாக ஆட்சி அமைத்தது. இந்த வேளையில் தமிழகத்தின் புதிய முதல்வர் திரு. C. ஜோசப் விஜய் அவர்களுக்கும் அவரது அமைச்சரவை மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நமது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும், செபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

02.02.2024-ல் தமிழக வெற்றிக்கழகம் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டு வெறும் 27 மாதங்களே ஆகியிருக்கிற நிலையில், தான் சந்தித்த முதல் தேர்தலிலேயே அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கட்சி தொடங்கி முதல் தேர்தலில் வெற்றி பெற்ற நான்காவது இந்திய தலைவர் திரு. C. ஜோசப் விஜய் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். சுதந்திர இந்தியாவின் 79 ஆண்டுகள் கால வரலாற்றில் அரசியல் அனுபவம் இல்லாத ஒருவர் 34.9

சதவிகிதம் வாக்குகளைப் பெற்று ஆட்சி அமைப்பது என்பது அரிதினும் அரிதான அதிசயம்.

தமிழ்நாட்டில் 76 ஆண்டுகள் வரலாறு கண்ட திமுக-வையும், 54 ஆண்டுகள் வரலாறு கண்ட அதிமுக-வையும் பின்னுக்குத் தள்ளி தொடங்கி 27 மாதங்களே ஆன ஒரு கட்சி ஆட்சியை பிடித்திருப்பது என்பது தமிழ்நாட்டு மக்கள் மாற்றத்தை மட்டுமே மனதில் கொண்டு வாக்களித்திருக்கிறார்கள் என்பதையே காட்டுவதாக அரசியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். இந்த தேர்தலில் மக்கள் சித்தாந்தம் அடிப்படையிலோ, பிரச்சனைகளை மையமாகக் கொண்டோ வாக்களித்ததாக கூறமுடியாது. திராவிட ஆதிக்கத்திலிருந்து தமிழக அரசியலில் புதுமை தேவை என்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு வாக்களித்திருப்பதாகத் தோன்றுகிறது. குறிப்பாக, "வெளியில் பெரிதாக தென்படாத 'ஆட்சி எதிர்ப்பு மனநிலை' மக்களிடையே இருந்திருப்பதையே இந்த முடிவுகள் காட்டுகின்றன"- என்று அரசியல் விமர்சகர் பேராசிரியர் ராமு மணிவண்ணன் கூறியுள்ளது கவனிக்கத்தக்கதாகும். முதல் தலைமுறை வாக்காளர்கள் மற்றும் பெண்களின் ஆதரவு தவெக-விற்கு கணிசமாக இருப்பதாகவும், திமுக, அதிமுக-வின் வாக்குகளில் ஒரு பகுதி விஜய் பக்கம் திரும்பும் எனவும் அரசியல் நிபுணர்கள் பலர் கணித்திருந்தாலும் இவ்வளவு பெரிய வெற்றியைத் தரும் அளவிலான ஆதரவு கிடைக்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை என்கிறார் பத்திரிக்கையாளர் திவ்யா.

இந்த தேர்தல் முடிவுகள் பல செய்திகளை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, திராவிட கட்சிகளுக்கு

இதுவோர் எச்சரிக்கை மணியாக இருப்பதாக நிபுணர்கள் கூறும் நிலையில், தேர்தல் வரலாற்றில் இது மிகவும் கவனமாக ஆராயப்பட வேண்டிய ஒரு தேர்தல் முடிவாகும். திரு. C. ஜோசப் விஜய் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்றப்பின் எதிர்கட்சி தலைவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றது பாராட்டப்பட வேண்டிய ஆரோக்கியமிக்க அரசியல் நாகரீகமாக தோன்றுகிறது. பெண்கள் பாதுகாப்பு, போதை ஒழிப்பு, சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு, வழிபாட்டு இடங்கள், கல்வி நிறுவனங்கள், பேருந்து நிலையங்கள் அருகில் இருந்த 717 டாஸ்மார்க் கடைகளை அப்புறப்படுத்தும் ஆணைகள் பாராட்டுக்குரியதும் மக்கள் மனம் ஈர்க்கும் செயலுமாகும்.

இந்திய அரசியல் அன்றாட நிகழ்வுகளில் மாநில கட்சிகளை கபளிகரம் செய்து, தெளிவாக அதிகார துஸ்பிரயோகம் செய்யும் மதவாத சக்திகளின் மத்தியில் முதல்வர் திரு. C. ஜோசப் விஜய் அவர்கள் எப்படி தமிழ்நாட்டின் நலன் சார்ந்து நிலைத்து நிற்கப்போகிறார் என்பதே தமிழக முதல்வரின் தலைக்கு மேல் தொங்கிக்கொண்டிருக்கும் கூர்மையான கத்தியாகும்.

அடிப்படை மதவாத தந்திர திட்டங்களுக்கு அடி பணியாது மாநில நலனுக்கு போராடிக்கொண்டிருந்த முன்னால் தமிழக முதல்வர் திரு. ஸ்டாலின், கேரள முதல்வர் திரு. பிணராய் விஜயன், மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஆகிய மூவரும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதன் வாயிலாக இந்திய தேர்தல் முறையில் ஏதோ கோளாறு உள்ளதாக பலரும் தங்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்துத்துவா சக்திகள் தங்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் நோக்கில், திராவிட கட்சிகளைத் தனிமைப்படுத்தி, பலகீனப்படுத்தி தங்களது ஆதிக்கத்தையும், மாநில நலனுக்கு எதிரான திட்டங்களையும் செயல்படுத்துவதற்கு இலகுவான சூழ்நிலையை இன்று தமிழகத்தில் உருவாக்கியுள்ளனரோ என்ற ஐயம் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் விரும்புகிற எல்லோர் இதயங்களிலும் எழுந்திருப்பதை உணர முடிகிறது. அதற்கேற்ப பொறுப்பேற்றிருக்கும் தவெக அரசில் அமைச்சர் பதவி வகிக்கும் சிலர் RSS பின்புலம் உள்ளவர்கள் என்றும் கூறப்படுகிறது. தமிழகத்தில் போராடி நிலைநிறுத்தப்பட்டிருக்கும் இரு மொழி கொள்கை, புதிய கல்வி கொள்கை எதிர்ப்பு, மாநில உரிமைகள் உள்ளிட்டவை குறித்த புதிய அரசின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்பதையே எல்லாரும் உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அறுதி பெரும்பான்மை இல்லாத நிலையில் ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள அன்றாட போராட்டம், நிதி நெருக்கடி என்றிருக்கும் அரசியல் சூழலில், ஒன்றிய அரசுடன் அனுசரணையாக போவது என்ற சூழ்ச்சியில் புதிதாக பொறுப்பேற்றிருக்கும் முதல்வர் திரு. C. ஜோசப் விஜய் அவர்கள் சிக்கிக்கொள்ளாமல், எந்த மிரட்டல்களுக்கும் அடிப்பணியாது, தமிழக நலன்களை காப்பார் என்று நாம் நம்புகிறோம்.

ஓர் இடத்தை மட்டுமே பாஜகவுக்கு கொடுத்த தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை புரிந்துகொண்டு, மாநில உரிமை மற்றும் மக்கள் நலன் காத்து தமிழக உரிமைகளை உயர்த்திப் பிடித்து சிறப்பாக மக்களாட்சி நடத்திட புதிய ஆட்சியாளர்களை வாழ்த்துவோம்.

வாழ்க! புதிய ஆட்சியாளர்கள்!

வெல்க! தமிழக மக்கள் நலன்!


வளர்க! தமிழ்நாடு!

வாழ்த்துகளுடன்

ஆயர் ஜீவானந்தம்.

திருத்தந்தையோடு மன்றாடுவோம்

ஜூன் : உலகம் இரக்கத்தில் மலர்ந்திட ...



நாம் ஒவ்வொருவரும் இயேசுவுடனான தனிப்பட்ட உறவில் ஆறுதல் காணவும், உலகின் மீது நாம் இரக்கம் கொள்ள அவரது இதயத்திலிருந்து கற்றுக்கொள்ளவும் மன்றாடுவோம்.

Bishop's Programme – JUNE 2026

Date	Day	Time	Programme
05	Fri	09.30 a.m.	Interview for the B.T & S.G Canditates (TET), Kumbakonam
06	Sat	06.00 p.m.	Mass at Kabisthalam
07	Sun	10.00 a.m.	Jubilee Celebration, Chennai
08	Mon	06.00 p.m.	Diaconate Ordination, Vengangudy
08 & 09		Mon & Tue	Class: Francesco Capuchins Theological Institute, Vengangudy
10	Wed	10.00 a.m.	Council Meeting, Kumbakonam
11	Thu	06.00 p.m.	Feast Mass: Sacred Heart Hospital, Kumbakonam
12	Fri	06.00 p.m.	Feast Mass: Naal Road, Kumbakonam
14	Sun	06.00 p.m.	Corpus Christi, Kumbakonam
17 & 18		Wed & Thu	Annual Diocesan Clergy Meeting, Poondi
19	Fri	11.30 a.m.	Feast Mass, Sacred Heart Minor Seminary: Kumbakonam
24	Wed	5:30 p.m.	Mass: St Don Bosco School, Varadarajanpettai
26	Fri	10.00 a.m.	Diocesan Pastoral Council Meeting, Kumbakonam
27 & 28		Sat toSun	Pastoral Visit, Guanella Nagar
29	Mon		Feast Mass: Vellore

TRANSFERS - DIOCESE OF KUMBAKONAM
MAY, 2026

PARISH PRIESTS

PRIESTS	PARISHES
Fr. S. Arockiadoss	Kallakudi
Fr. S. Belfit Antony	Naduvalur
Fr. P. John Maria Viannay	Siluvaipatti
Fr. M. Joseph	Vadagarai
Fr. L. Mariadoss	Alambakkam
Fr. C. Peter Francis	Sukkambar
Fr. L. Rex Alex Silvester	Socius - Sembodai
Fr. A. Sahayaraj	Kaniyiruppu
Fr. M. Selvaraj	Thondamandurai

OFFICES/COMMISSIONS/INSTITUTIONS

Fr. M. Dominic Savio	Secretary to KMSSS
Fr. I. John Kennedy	Chancellor, Minister & PRO
Fr. A. Kirubaharan	Bible & Anbiam Commissions
Fr. A. Kulandainathan	Interreligious Dialogue & Ecumenism Commissions
Fr. V.I. Adaikalasamy	Principal, St Peter's Arts & Science College, Melaneduvai

SCHOOLS

Fr. A. Antony	PG (Assistant), St. Xavier's Hr. Sec. School, Purathakudi
Fr. R. Jayaraj	HM, St. Mary's High School, Pallividai
Fr. V. E. Santhakumar	HM, Bharatha Madha Hr. Sec. School, Naduvalur
Fr. V. William Edward	Correspondent, Christ the King CBSE School, Padalur

OVERSEAS MINISTRY

Fr. A. Benedict Prabaharan	Milan, Italy
Fr. G. Christuraj	Camden Diocese, US
Fr. A. Deva Varaprasadam	Keewatin Le Pas diocese, Cananda

LAW PRACTICE (Madurai)

Fr. S. Arun Patric Xavier

ON MEDICAL LEAVE

Fr. N. Chinnapparaj

ON RETIREMENT

Fr. J. John Pannerselvam	Sahayamadha Hospital , Pullambadi
Fr. A. Santiagu	Sahayamadha Hospital, Pullambadi

ASSISTANTS

Fr. Berchmans Devadass MU	Ammanpet
Fr. Praveen OMI	Ayyampet

Fr. Semiyon Raj	Kumbakonam
Fr. Ebinezar Sachin	Elakurichy
Fr. Dominic OCD	Konneikudi
Fr. Paulraj OFM Cap.	Lalgudi
Fr. Joseph Vijay (Trichy Diocese)	Michaelpatti
Fr. Arul Francis & Fr. Arun Kumar OFM	Poondi
Fr. Suvaikkan Raj Simon SDM	Pullambadi
Fr. Baskar Francis SDM	Vadagari
Fr. Arokia Jayseelan	Vadugarpet
Fr. Deepak Joe Prince	Varadarajanpet
Dn. John Darshan (Montfortian)	Thiruvaiyaru

Wishing you All the Best

Yours sincerely in Christ,

+Most Rev. A. Jeevanandam,

Bishop of Kumbakonam.

Information - Contact Number

Fr. I. John Kennedy

Chancellor & Minister

99438 86183

BIRTHDAY

02.06.1985	Fr. John Maria Vianney	Siluvaipatti
02.06.1944	Fr. M. S. Selvaraj	USA
02.06.1964	Fr. U. S. Arockiasamy	Thottiyam
02.06.1984	Fr. A. Marceline Antony Raj	Padalur
03.06.1985	Fr. I. Edisonraj	Rome
09.06.1982	Fr. B. John Bosco	Trichy
11.06.1970	Fr. S. Eugene Karunakaran	USA
15.06.1973	Fr. S. J. Soosaimanickam	Perambalur
16.06.1975	Fr. A. Victor Paulraj	Keelamichaelpatti
26.06.1973	Fr. A. Arockia Sahayaraj	Ariyalur
27.06.1974	Fr. J. Regis	Palayam
29.06.1978	Fr. A. Benedict Prabaharan	Italy

NECROLOGY

07.06.1969	Rev. Fr. S. Arokiasamy	Annamangalam
07.06.2020	Rev. Fr. M. Santiago	Manickapuram
09.06.1990	Rev. Fr. G. Maria Alphonse	Kumbakonam
10.06.1961	Rev. Fr. Arumainathar	Kumbakonam
11.06.1989	Rev. Fr. Sanjeevi	Ammanpet
16.06.1989	Rev. Fr. T. Arokiasamy	Kokkudi

18.06.1953	Rev. Fr. P. M. Stephen	Purathakudi
20.06.1998	Rev. Fr. A. Rayappar	Poondi
22.06.1982	Rev. Fr. A. Arulnathar	Coimbatore
24.06.1966	Rev. Fr. George Kadanthot	Pudukottai
27.06.2025	Rev. Fr. S. A. Chinnappan	Kumbakonam
29.06.1983	Rev. Fr. A. Mariasamy	Kumbakonam
29.06.2012	Rev. Fr. V. Antonisamy	Elakurichy

ORDINATION DAY

07.06.1978	Fr. P. Henry Pushparaj	Ayakudi
07.06.1978	Fr. S. Selvarayar	Thogur
07.06.1978	Fr. A. Santiagu	Kallakudi
07.06.1978	Fr. A. Samson	Kumizhankuli
08.06.1985	Fr. S. Augustine	Melaneduvai
08.06.1985	Fr. A. Maria Francis	Papanasam
08.06.1985	Fr. Martin de Porres	Kumbakonam
11.06.1973	Fr. M. S. Selvaraj	USA
11.06.1973	Fr. P. Joseph	Pullambadi
15.06.1983	Fr. C. Peter Francis	Sukkambar
15.06.1983	Fr. L. Benjamin	Kulamanickam
17.06.1974	Fr. A. Antony Joseph	Kumbakonam
29.06.1977	Fr. S.I. Arulsamy	Kumbakonam
30.06.1975	Fr. R. Vincent Ferror	Pullambadi

FROM THE VICAR GENERAL OFFICE

ANNUAL DIOCESAN CLERGY MEETING

Dear Fathers,

We are happy to convene an Annual Meeting of the Diocesan Clergy of Kumbakonam Diocese in the Poondi Madha Retreat Centre, Poondi. It is designed mainly to discuss about the financial position of our diocese and to discuss on the draft for the Parish Pastoral Council.

Venue : Poondi Madha Retreat Centre, Poondi
Date : June 17-18, 2026

PROGRAM

17-06-2026 Wednesday

10.00 am : Arrival
10.30 am : Presentation of Accounts – Mr. S. Francis, Auditor
11.30 am : Coffee Break
11.45 am : Discussion on the Statement of Accounts
01.00 pm : Lunch
03.00 pm : Presentation of Budget & Discussion
04.30 pm : Tea
06.00 pm : Presentation of Parish Pastoral Council
07.30 pm : Supper
08.45 pm : Rosary

18-06-2026 Thursday

06.45 am : Morning Prayer & Holy Mass
08.00 am : Breakfast
09.00 am : Discussion on Parish Pastoral Council
10.30 am : Coffee Break
11.00 am : Discussion on Common Matters
01.00 pm : Lunch & Dispersal

N.B.: The meeting is only for the Diocesan Clergy. All the Diocesan priests are kindly requested to participate in the meeting for the greater welfare of our diocese.

Msgr. M. Philomindas,
Vicar General

REQUEST FROM TNBC

Dear Fathers,

During the Half-yearly meeting of the TNBC, the Bishops proposed to collect the data about those lay people who have served or are serving the society as professionals in different fields such as education, medicine, law, administration, engineering, AI, information technology, social work, media, finance, entrepreneurship, agriculture, public service etc. They may be professors, tutors working in colleges and universities, BDOs, Tasildhars and above in cadre in Revenue Departments, Sub-registers in the Registration department, Reputable medical and paramedical personals, famous advocates, judges in the judiciary, engineers working in different government departments or having their own firms, auditors, Media experts, press people, Inspectors, DSP or SP in Police department etc. Those in service or retired are considered for our purpose.

You may please inquire about your parishioners who are rendering their service in the above fields, collect the particulars, furnish the details in the following format and send it to Rev.Fr. I. John Kenney, PRO of our diocese before 20th of June 2026.

S.No.	Name and Resident Address	Contact Mob. no.	Position in	Working at service
1	Mr/Mrs./Miss. XXXXXXX	xxxxxxxxxx	Sub-register in service/retired	Trichy

N.B.: Kindly take the names of Catholics from your parish

Kindly send the list to:
Rev.Fr. I. John Kennedy, PRO
Bishop's House
Kamaraj Road, Kumbakonam – 612001
Thanjavur Dt.
Cell no. 99438 86183

Msgr. M. Philomindas
Vicar General

ANNOUNCEMENT FROM THE EDUCATION OFFICE

1. TET and TRB qualifications are compulsory for registration of qualified teachers in the Diocesan Employment Office.
2. Renewal of registration will be done only in December every year. If there are any changes such as phone number or address, it is the responsibility of the applicant to update them on time.
3. For any transfer of school teachers, the official transfer application must be used and signed by the correspondent.
4. All correspondents are requested to instruct school teachers working in diocesan schools to apply for the TET exam if they wish to be considered for promotions.
5. Diocesan Education Office phone number: 7337780290.
6. If a bride from another diocese marries a bridegroom from our diocese and wishes to register here, she must obtain a No Objection Certificate (NOC) from her respective diocese.
7. Candidates must note that separate registration numbers are maintained for Secondary Grade, UG, and PG levels. Accordingly, TET Paper I marks must be entered for SG, TET Paper II marks for UG, and TRB marks for PG. Therefore, applicants are required to complete separate registrations for each category.

Fr. A. Victor Lawrence,

Secretary,

Diocesan Education Committee

Kumbakonam Diocese

FROM THE PROCURATOR'S OFFICE

Dear Rev. Fathers,

Greetings from Fr. J. Antony Joseph!

The following is the list of Parishes, Institutions and Priests who have contributed to the Diocese in May, 2026.

Contribution from Community Halls	
Michaelpatti	1,00,000.00
Thuraiyur	50,000.00
CONTRIBUTION TO DIOCESE	
Papanasam	1,00,000.00
Fr. C. Kulandai	20,000.00
Fr. S. Belfit Antony, Chancery	1,00,000.00
CONTRIBUTION FROM PRIESTS ABROAD	
Fr. Alwin Joseph for 2024	3,00,000.00
Fr. B. Robert	3,10,000.00
MASS INTENTIONS	
Papanasam	50,000.00
Koovathur	20,000.00
Thuraiyur	46,500.00
Perambalur	37,700.00
SALARY FROM PRIESTS	
Fr. G. Arockiaraj for April 2026	86,700.00
Fr. A. Arul Sebastian for April 2026	49,118.00
Fr. U. Rajendrasekar for April 2026	32,086.00
Fr. V.E. Santhakumar for April 2026	73,200.00
SLAB CONTRIBUTION for 2025-2026	
Koovathur	20,000.00

Kottapalayam	50,000.00
Kumilankuzhi	30,000.00
Manakkal	5500.00
Michaelpatti	1,00,000.00
Perumalpalayam	10,000.00
Sikkalnayakkanpet	5400.00
Thennur	50,000.00
Thuraiyur	20,000.00
Villiavarambil	10,000.00
Perambalur	1,25,700.00
Vadaveekam	10,000.00
PENSION CONTRIBUTION	
Fr. L. Benjamin	24,000.00

I sincerely appreciate each one of you for your cooperation in making the audit at the Vicariate Centres a success. Except for a few who, due to valid reasons and with prior intimation, could not attend the audit, all others participated wholeheartedly. Necessary arrangements will be made separately for the auditing of those parishes where audit is still to be conducted.

Once the audit statements are received from the auditor's office, one copy will be handed over to Parish Priests / Head of the Institution, while another copy will be retained in the Diocese for office records.

I thank all those who have remitted their dues to the Diocese during this month. With regard to slab payments, I humbly request that, in future, these payments is made within the respective financial year.

Clergy Meeting

On the 17th and 18th of June 2026, we shall hold the Annual General Body Meeting of all the diocesan priests of our Diocese at the Poondi Madha Retreat Centre. During the meeting, the accounts for the financial year 2025–2026 will be presented in detail. I kindly request all priests to attend the meeting without fail.

I would also like to remind the few priests who have not yet submitted their Annual Return to do so at the earliest. Likewise, those who have pending slab payments to the Diocese are requested to settle them without further delay.

The Holy Mass Donation Register has already been supplied to all parishes. Henceforth, all Mass donations need to be properly recorded in the register, and receipts should be issued to the donors accordingly. Priests who have not yet received the register are requested to collect it from the Procurator's Office at the earliest.

While sending money through wire transfer, please inform us otherwise we will not know who and for what purpose it is sent.

Finally, I extend my sincere gratitude to each one of you for your kind words, encouragement, and generous cooperation, which have greatly helped me in carrying out my responsibilities effectively.

With prayers and regards,

Yours in Christ,
Fr. J. Antony Joseph,
Procurator.

இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்

26.04.2026 மறைமாவட்ட நிர்வாகக்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் எதிர்வருகின்ற கலைத்திருவிழா குறித்தான திட்டமிடல் மற்றும் இயக்க பொறுப்பாளர்களுக்கான பணிகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன.

27.04.2026 முதல் 02.05.2026 வரை கும்பகோணம் மற்றும் மைக்கேல்பட்டி பங்குகளில் உள்ள இளைஞர் இயக்கங்களை சந்தித்து கலைத்திருவிழா போட்டிக்கான அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வின் பங்கேற்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

03.05.2026 கும்பகோணம் மறைவட்ட நிர்வாகக்குழு மற்றும் மறைமாவட்ட மற்றும் மறைவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. இதில் கலைப்போட்டிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அனைத்து பொறுப்பாளர்களுக்கும் பணிகள் பகிர்ந்து வழங்குப்பட்டன.

09.05.2026 நமது மறைமாவட்ட இளையோர் பணிக்குழு சார்பாக மறைமாவட்ட அளவில் கலை போட்டி நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் நம் மறைமாவட்ட ஆயர் அவர்கள் ஆசியுரை வழங்கினார். மேலும் இதில் நமது மறைவட்ட முதன்மைதந்தை G. கோஸ்மான் ஆரோக்கியராஜ் மற்றும் மறைபணி நிலைய இயக்குநர் அருள்பணி A. ராஜமாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்விற்கு வந்திருந்த அனைவரையும், மறைவட்ட இளைஞர் இயக்க தலைவர் செல்வன் ஆகாஷ் வரவேற்றார். மறைமாவட்ட இளைஞர் இயக்க செல்வி எபிகா முன்னிலையில் கலைப்போட்டிகள் ஆரம்பமானது.

போட்டியின் முடிவில் முதல் பரிசினை புனல்வாசல் பங்கின் இளைஞர் இயக்கத்தினரும், இரண்டாம் பரிசை கும்பகோணம் பங்கின் இளைஞர் இயக்கத்தினரும், மூன்றாம் பரிசினை அமலாசிரம் பங்கின் இளைஞர் இயக்கத்தினரும் பெற்றுச் சென்றனர். மறைமாவட்ட இளைஞர் பணிக்குழு செயலர் அனைவரையும் வாழ்த்தி, நன்றி சொல்லி நிகழ்வை நிறைவு செய்தார்.

ஜூன் மாதம் திருமணத் தயாரிப்பு பயிற்சி நடைபெறும் இடங்கள்

வ.எண்.	தேதி	இடம்
1	ஜூன் 6 மற்றும் 7 சனி மற்றும் ஞாயிறு	குழந்தை இயேசு திருத்தலம் நம்பர்-1, டோல்கேட், திருச்சி
2.	ஜூன் 21 மற்றும் 22 சனி மற்றும் ஞாயிறு	புனித அருளானந்தர் மறைப்பணி நிலையம், கும்பகோணம்

இவண்,

அருள்பணி S. ஜான் கொர்னேலியுஸ்,

செயலர், இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்.

மறைக்கல்வி, நற்செய்தி அறிவிப்பு மற்றும் பெஸ்கி கலைக்குழு பணிக்குழுக்கள்

மறைக்கல்வி

02.05.2026 முதல் 09.05.2026 - வரை அனைத்து பள்ளிகளையும் அலைபேசியில் தொடர்புகொண்டு வருகின்ற கல்வி ஆண்டிற்கு தேவையான புத்தகங்களின் எண்ணிக்கையானது பெறப்பட்டது.

10.05.2026 நாச்சியார் கோயில் பங்கில் கட்டப்பட்டிருக்கிற புதிய ஆலயத்தை அர்ச்சிக்கிற நிகழ்விற்கான திருவழிபாட்டிற்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டன.

11.05.2026 முதல் 15.05.2026- வரை பாபாநாசம் பங்கில் புதுநன்மை பெறுகின்ற பிள்ளைகளுக்கான தயாரிப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன.

11.05.2026 முதல் 15.05.2026- வரை வைகறை பதிப்புகம், மற்றும் திண்டிவனம் ஆகிய மையங்களுக்கு வருகின்ற கல்வியாண்டிற்கு தேவையான மறைக்கல்வி மற்றும் நன்னெறி புத்தகங்களின் எண்ணிக்கை அனுப்பி வைக்கப்பட்டன.

பெஸ்கி

09.05.2026 - அன்று நமது மறைமாவட்ட இளையோர் பணிக்குழு ஒருங்கிணைத்து நடத்திய பங்குகளுக்கு இடையிலான கலைவிழா போட்டியானது பெஸ்கி கலைக்குழுவினரால் ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

27.05.2026 - 22.04.2026- அன்று வடகரை புனித லூர்து அன்னை ஆலயத்தில், பங்குத்தந்தை S. ஆரோக்கியதாஸ் மற்றும் A. யூஜின் டோனி ஆகியோர் நிறைவேற்றிய திருப்பலியானது பெஸ்கி கலைக்குழுவால் ஒளி, ஒலிப்பதிவு செய்யப்பட்டு மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

நமது மறைமாவட்ட பெஸ்கி கலைக்குழுவின் சார்பாக பரதம் மற்றும் கீபோர்ட் வகுப்புகள் கோடைக்கால சிறப்புப் பயிற்சியாகவும், தொடர் பயிற்சியாகவும் நடைபெற்று வருகின்றன.

நமது மறைமாவட்ட பங்குகளுக்கு சென்று கலைநிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தேவையான முயற்சிகளும், முன்னெடுப்புகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவண்,

அருள்பணி A. இராஜமாணிக்கம்,

இயக்குநர், மறைப்பணி மையம்.

பொதுநிலையினர் பணிக்குழு

26-04-2026 முதல் 30-04-2026 வரை திண்டிவனம் முப்பணி மையத்தில் தமிழக ஆயர் பேரவை நடத்தும் இயேசுவின் தன்னார்வ மறைபரப்புச் சீடர்கள் பயிற்சியின் மூன்றாம்கட்டம் (இறுதி) ஐந்து நாட்கள் நடைபெற்றது. முப்பணி மையத்தில் வேதியர் பயிற்சி நிறுத்தப்பட்ட நிலையில் அதற்கு மாற்றாக இத்தன்னார்வ பயிற்சி நடைபெறுகிறது.

இதில் மறைக்கல்வி, விவிலியம், திருவழிபாடு குறித்த கருத்துரைகள் வழங்கப்பட்டன. பயிற்சியின் ஒரு பகுதியாக இல்லங்கள் சந்திப்பு நடத்தப்பட்டது. மொத்தம் 55 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியில் மூன்று ஆண்டுகள் நிறைவு செய்த 21 பயிற்சியாளர்களுக்கு முப்பணி மைய இயக்குநர் அருட்பணி. ஜான் பிரிட்டோ பாக்யராஜ் அவர்கள் சான்றிதழ் வழங்கினார். பயிற்சியை தமிழக மறைக்கல்வி பணிக்குழு செயலர் அருட்பணி. பெனடிக்ட் M.D. ஆனலின் அவர்கள் ஒருங்கிணைப்பு செய்தார். நமது மறைமாவட்டத்திலிருந்து பொதுநிலையினர் பணிக்குழு செயலர் மூன்று ஆண்டுகள் கலந்துகொண்டு பயிற்சிக்கான சான்றிதழைப் பெற்றார்.

10-05-2026 அன்று மறைமாவட்டத்தின் பொதுநிலையினர் அமைப்புகளைச் சந்தித்து கருத்தமர்வு நடத்தும் நோக்கில் மரியாயின் சேனையின் இலால்குடி கொமித்சியத் திற்குட்பட்ட கியூரியா பொறுப்பாளர்களுக்கான கூட்டம் இலால்குடி புனித

சூசையப்பர் தேவாலய கூட்ட அரங்கில் நடைபெற்றது. "திருஅவையில் பொதுநிலையினரின் பொறுப்புகளும் கடமைகளும்" என்ற தலைப்பில் பணிக்குழு செயலரால் உரை நிகழ்த்தப்பட்டது. பொதுநிலையினர் அமைப்புகளின் பொறுப்பாளர்கள் தாங்கள் சார்ந்துள்ள அமைப்புகளில் இன்னும் ஆர்வத்தோடு பங்கேற்பது குறித்தும் தங்களது சுய மற்றும் குடும்ப ஆன்மீகத்தை வளர்ப்பது குறித்தும் பங்கில் உள்ள மற்ற பொதுநிலையினர் அமைப்புகளோடு இணைந்து செயல்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. 45 பேர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

ஜூன் மாத செயல்திட்டங்கள் :

1) 10-06-2026 தமிழக பொதுநிலையினர் பணிக்குழுவின் மறைமாவட்ட செயலர்களுக்கான பொதுக்குழு கூட்டம் திருச்சி, பிராட்டியூர் பொதுநிலையினர் உருவாக்க மையத்தில் நடைபெறவுள்ளது.

2) ஜூன் மாதத்தில் மறைமாவட்ட மேய்ப்புப்பணிப் பேரவையின் செயற்குழு மற்றும் பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது

3) மறைமாவட்ட பொதுநிலையினர் அமைப்புகளின் பொறுப்பாளர்கள் சந்திப்பு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவண்,

திரு. செ. பாப்பு வில்லியம்,

செயலர், பொதுநிலையினர் பணிக்குழு.

பெண்கள் பணிக்குழு

05.05.2026 திருச்சி பிராட்டியூரில் பெண்கள் பணிக்குழுவின் மாநில செயலரின் அழைப்பை ஏற்று பணிக்குழு செயலர் அவர்கள் நேரில் சென்று அவரை சந்தித்து பணிக்குழுவின் பணிகள் குறித்து கலந்தாலோசித்து வந்தார்.

06.05.2026 செம்போடை பங்கில் உள்ள பெண்கள் இயக்க உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடப்பட்டது.

09-13.05.2026 NBCLC தேசிய நடுநிலையம் பெங்களூரில் நடைபெற்ற 5 நாட்கள் தலைமைத்துவ பயிற்சியில் நமது மறைமாவட்ட பெண்கள் பணிக்குழு சார்பாக, கும்பகோணம் மறைவட்டம், கும்பகோணம் பங்கு திருமதி. லதா, இலால்குடி மறைவட்டம் திருக்காவலூர் பங்கு திருமதி அமலராணி, புதூர் உத்தமானூர் பங்கு திருமதி விமலா ஆகியோர் பங்கேற்று பயனடைந்தார்கள்.

14.05.2026 வடகரை பங்குத்தந்தை அவர்களையும் அப்பங்கில் உள்ள பெண்கள் இயக்க உறுப்பினர்களையும் சந்தித்து இயக்கம் தொடர்ந்து செயல்படுவது குறித்து கருத்துகள் பகிரப்பட்டன.

15.05.2026 பெண்கள் பணிக்குழு செயலர்களுக்கான கூட்டம் இணையம் வழியாக நடைபெற்றது. இதில் நமது பணிக்குழுவின் செயலர் அவர்கள் பங்கேற்று கருத்துகளை பகிர்ந்துகொண்டார்கள்.

11-31.05.2026 குவனெல்லா நகர் பங்கில் முதல் திருவிருந்து மற்றும் உறுதிப்பூசுதல் பெறும் மாணவர்களுக்கான தயாரிப்பு

வகுப்புகளானது பணிக்குழுவின் செயலர் மற்றும் வேதியர் அவர்களால் நடத்தபட்டன.

இவண்,

அருள்சகோதரி ஸ்கொலாஸ்டிகா, DSMP

செயலர், பெண்கள் பணிக்குழு.

விவிலிய மற்றும் அன்பிய பணிக்குழுக்கள்

அன்புடையீர் வணக்கம், தமிழக ஆயர் பேரவையின் அன்பிய பணிக்குழுவின் வெள்ளி விழா ஆண்டினை முன்னிட்டு பல்வேறு முன்னெடுப்புகளுக்காக ஒவ்வொரு பங்கிலிருந்தும் இரண்டு அன்பிய பொறுப்பாளர்களது (ஒரு ஆண் + ஒரு பெண்) பெயர்களும் அவர்களது அலைபேசி எண்களும் கோரப்பட்டுள்ளது. எனவே அன்புகூர்ந்து அனைத்து பங்குத்தந்தையர்களும் தங்களது பங்கிலிருந்து ஆர்வமிக்க இரு அன்பிய பொறுப்பாளர்களது பெயர்களையும், அலைபேசி எண்ணையும் வருகிற ஜீன் 25- ஆம் தேதிக்குள் பணிக்குழு செயலருக்கோ, வேதியருக்கோ அனுப்பிவைக்குமாறு உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் பங்கில் அன்பியங்கள் செயல்படாமல் இருந்தாலோ, ஆரம்பிக்க விருப்பம் இருந்தாலோ அன்பிய பணிக்குழு செயலரை அணுகுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்புக்கு

1. அருள்பணி. அ. கிருபாகரன், செயலர், விவிலிய மற்றும் அன்பிய பணிக்குழுக்கள்- 7639723535

2. வேதியர் திரு. சகாயராஜ் - 9597969342

பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு

22.04.2026 - 23.04.2026 ஆகிய தேதிகளில் கும்பகோணம் மறைவட்ட பங்குகளில் உள்ள தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாலை நேர வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை பணிக்குழுவின் செயலர் அருள்பணி. A. இருதயராஜ் அவர்கள் நேரில் சந்தித்தார்.

24.04.2026 - 27.04.2026 ஆகிய தேதிகளில் மைக்கேல்பட்டி மறைவட்ட பங்குகளில் உள்ள தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாலை நேர வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை பணிக்குழுவின் செயலர் அருள்பணி. A. இருதயராஜ் அவர்கள் நேரில் சந்தித்து கல்வியின் முக்கியத்துவம் குறித்தக் கருத்துகளை வழங்கினார்.

02.05.2026 மைக்கேல்பட்டி மறைவட்ட பங்குகளில் உள்ள தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாலை நேர வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை பணிக்குழுவின் செயலர் அருள்பணி. A. இருதயராஜ் அவர்கள் நேரில் சந்தித்து சுயதொழில் மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்தக் கருத்துகளை பகிர்ந்துகொண்டார்.

இவண்,

அருள்பணி A. இருதயராஜ்,

செயலர், பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு.

கல்வி உதவித்தொகை நன்கொடை விபரம் ஜூன் - 2026

நெ.	விபரம்	தொகை
1	அருள்பணி A. தாமஸ் சைமன்ராஜ், கண்டியாங்குப்பம்	5000
2	பூண்டி மாதா பசிலிக்கா	20,000
3	அருள்பணி M. அகஸ்டின், (அகலங்கநல்லூர்)	10,000
4	அருள்பணி A. விக்டர் பால்ராஜ், கீழமிக்கேல்பட்டி	10,000
5	அருள்பணி G. கோஸ்மான் ஆரோக்கியராஜ், கும்பகோணம்	5000
6	அருள்பணி A. சந்தியாகு, (மேலரசூர்)	10,000
7	மார்கிரேட்-ஆரோக்கியதாஸ், திருவிடைமருதூர்	5000
8	பிரான்சிஸ் – அமலோற்பவ கிரேஸி, சுக்காம்பார்	5000
9	அருள்பணி R. பீட்டர் ஆரோக்கியதாஸ், வெங்கங்குடி	10,000
10	அருள்பணி S. மரியதாஸ், கொணலை	5000
11	அருள்பணி G. மைக்கேல், கோவண்டாக்குறிச்சி	5000
12	அருள்பணி T. தேவதாஸ், கும்பகோணம்	5000
13	அருள்பணி ராக் HGN, கீழமிக்கேல்பட்டி	2000
14	கும்பகோணம் பங்குப்பேரவை	5000
15	திரு. சைமன்ராஜ், கும்பகோணம்	2000
16	ஆரோக்கிய ராசு (Advocate), இலால்குடி	15,000
17	இறைமக்கள், அகலங்கநல்லூர்	4000
18	இறைமக்கள், மேலரசூர்	1500
19	இறைமக்கள், கண்டியாங்குப்பம்	1500
	மொத்தம்	**1,26,000**





புதிய ஆலயத்தை புனிதப்படுத்துதல் : மேலரசூர்





புதிய ஆலய நேர்ந்தளிப்பு : நாச்சியார்கோயில்

KUMBAKONAM DIOCESE NEWS LETTER





உறுதிப்பூசுதல் - கும்பகோணம்



இயேசுவின் தன்னார்வ மறைபரப்பு சீடர்கள் பயிற்சி. திண்டிவனம்

Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.